செ.வெ.எண்:306 நாள்:12.05.2018

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் கோவில் முன்பு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் கோடைக்கால உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

-----

திருநெல்வேலி டவுண் அருள்மிகு நெல்லையப்பர் கோவில் முன்பு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் கோடைக்கால உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியினை திறந்து வைத்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜிலாசத்யானந்த் முன்னிலை வகித்தார்.

உணவுபாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சியை துவக்கி வைத்து மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கோடைக் காலத்தில் உடல் பாதுகாப்பு மற்றும் உணவு பாதுகாப்பு சமந்தமாக பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சியில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து வருகிறது. மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் கோடைக்கால விழிப்புணர்வு கண்காட்சியினை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து இன்று நமது மாவட்டத்தில் பொதுமக்கள் எளிய முறையில் கலப்படத்தை கண்டறியும் விரைவு சோதனைமுறைகள் மற்றும் பாதுகாப்பான சத்தான உணவு குழந்தைகளுக்கான பாதுகாப்பான உணவு, பொட்டலமிடப்பட்ட பொருட்களின் விபரங்களை சரிபார்த்து உறுதிபடுத்தி கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வு கண்காட்சி இன்று தொடங்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி 31.05.2018 வரை நடைபெறுகிறது. மேலும் சாலையோர உணவகங்கள் பொட்டலமிடப்பட்ட உணவு பொருட்கள் கோடை காலங்களில் அதிகளவில் விற்பனையாகும் குளிபானங்கள் மற்றும் ஐஸ் கீரிம் போன்றவற்றில் எண்ண கவனிக்கப்பட வேண்டும்மென்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதகைகளையும் காய்கறிகடைகள், சில்லறை வணிகம் புரிவோர் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் அடங்கிய பதகைகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் பதிவு சான்றிதழ் பெறப்பட்ட கடைகளில் மட்டுமே பழம், பழச்சாறு மற்றும் உணவு பொருட்களை வாங்க வேண்டும். பழங்கள், இயற்கையான பழச்சாறு, இளநீர், மோர், நுங்கு, நீர் சத்து நிறைந்த வெள்ளரிக்காய் போன்றவைகளை உட்கொள்ள வேண்டும். இராசயன நிறம், சுவையூட்டிகள், ஐஸ்கட்டிகள் கலந்த பழச்சாறுகளையும், குளிர்பானங்களையும் தவிர்க்க வேண்டும். செயற்கையாக கல்வைத்து பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் தோளின் நிறம் மட்டும் சீராக பழுத்த மாதிரியும் உள்ள காயாகவும், கனிந்த வசம் மற்றும் சுவை இல்லமாலும் இருக்கும். இவைகளை

பொதுமக்கள் வாங்கி உண்ணக் கூடாது. மேலும் கோடைக்காலங்களில் உடல் பாதுகாப்பிற்காக வெயிலில் செல்லும் போது குடை அல்லது தொப்பி பயன்படுத்தவும், பருத்தி ஆடைகளை அணியவும், இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை (250மி.லி) வீதம் தண்ணீர் பருகுவது கோடைகாலங்களில் மக்கள் உடல்நிலை பாதுகாப்பிற்கு உகந்ததாகும். பாதுகாப்பான உணவு முறையை நாம் கடைபிடித்தால் ஆரோக்கியமாக வாழலாம் என தெரிவித்தார்

இந்நிகழ்சியில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர் மரு.செந்தில்குமார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.தச்சை கணேசராஜா, திரு.ஜெரால்டு, திரு.மோகன், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.மகபூப்ஜான், திரு.பல்லிகோட்டை செல்லத்துரை, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திரு.காளிமுத்து, திரு.சங்கரலிங்கம், திரு.முத்துகுமார், உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.